**An excerpt from பெயர்ச்சி**

அத்தைக்கு இந்த வீட்டுடன் ஒன்ற கிட்டத்தட்ட ஆறுமாதங்கள் ஆனது. கண் பார்வை அந்த நேரம் மங்கத் துவங்கியிருந்தது. இதே மாடியின் கடைசி வீட்டில் குடியிருந்த ஆலியாவுடனும் நட்பு உருவாகும் வரை அமர்ந்த இடத்தில் கையிலிருந்த குச்சியால் தரையைத் தட்டிக்கொண்டிருந்தாள். அதன் பின்னர் ஆலியாவும் அத்தையும் படிக்கட்டுக்கருகில் அமர்ந்து பாசார் மலாயில் பேசிக் கொண்டிருப்பார்கள். பின்னாட்களில் அவர்களுக்கென்று ப்ளாஸ்டிக் நாற்காலிகளை அங்கே நிரந்தரமாய் போட்டு வைத்துக் கொண்டார்கள்.

"சரி, சரி, எல்லாம் பழகிடும்! உள்ள போய் வேலையைப் பாரு!"

செய்வதற்கு எதுவும் பெரிதாக இல்லை. வீடு வெறுமையாய் இருந்தது. சுவரில் அத்தையின் படத்தைக் கூட எடுத்துச் சென்றுவிட்டார்கள். வெறுமையாயிருந்த அவ்விடத்தின் ஆணியில் ஈஸ்வரியின் கைப்பை தொங்கிக் கொண்டிருந்தது. இன்று மாலை ஐந்து மணிக்குள் அவளும் நாற்பத்தோரு ஆண்டுகளாய் வாழ்ந்த இந்த வீட்டிலிருந்து வெளியாகிவிட வேண்டும். குளிர்ந்திருந்த தரையில் மல்லாக்கப் படுத்துக் கொண்டாள். இருபத்தியிரெண்டு வருடங்களுக்கு முன்னால் தினாவின் உடலையும், அதற்கு ஒன்பது வருடங்களுக்கு முன்னால் அத்தையின் உடலையும் கிடத்தியிருந்தது இதே இடத்தில் தான்.

"அம்மா! இந்த புத்தகத்தில இருக்கற படத்தைப் பாரேன்! இந்த நாய்க்கு காது எவ்வளவு நீளமாய் இருக்கு!"

"அம்மா, இன்னிக்குப் பசியாற வெளிய போகலாமா?"

"நீ ஏன்மா வனிதாவோட அம்மா மாதிரி முடியை வெட்டாம நீளமா விட்டிருக்க?"

“உம்பொண்ணு பேச்சைக் கேட்டு வெட்டி விட்டுறாத! பொண்ணுங்களுக்கு நீளமான முடி தான் அழகு”

இத்தனை நாட்கள் சுவருக்குள்ளும் தரைக்குள்ளும் தலைக்குள்ளும் பதுங்கியிருந்த குரல்கள் இப்போது ஆளற்ற வீட்டில் சுதந்திரமாய் உலவின.

“எனக்கு பொண்ணுங்க போடற மாதிரி சப்பாத்து வாங்கிக் கொடும்மா, இதைப் பார்த்து எல்லோரும் வெடைக்கிறாங்க!”

“கதிர் அண்ணாவுக்கு இருக்கிற மாதிரி எனக்கொரு சைக்கிள் வேணும்மா!”

“ஐய்யோ . . .”

“தினா சாலையைக் கடக்கும் போது காடி வந்து இடிச்சிருச்சாம்! கேக்கே தூக்கிட்டுப் போயிருக்காங்க”

தினா பிணமாக வீட்டுக்கு வந்தாள்.